# ஒரு ரதத்தில் பயணம் செய்து கொண்டே பிலிப்பு கிறிஸ்துவைப் பற்றிப் பேசினான்

**இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறுமாறு குழந்தைகளுக்குப் போதிக்கவும்.**

குழந்தைகளின் தேவைக்கு ஏற்ற பின்வரும் கல்வி செயல்பாடுகளில் எதையாவது தெரிந்து கொள்க.

முடியுமானால் குழந்தைகள் இந்தப் படத்தைப் பார்த்து வரையட்டும்.



அப். 8:26-40 ல் உள்ள பிலிப்பும் எத்தியோப்பியனும் பற்றிய கதையை **ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஓர் ஆசிரியரோ வாசிக்கவும்.** ரதத்தில் சென்ற ஒரு மனிதனுக்கு நற்செய்தியைக் கூற பிலிப்புவுக்கு பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு உதவினார் என்பதை அக் கதை கூறுகிறது. அவன் எத்தியோப்பியாவில் இருந்து வருபவன். முதலில் அவனால் வேதத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அப். 8:26-40 ல் உள்ள அக்கதையைக் கூறிய பின், **பின் வரும் கேள்விகளைக் கேட்கவும்** *(பதில்கள் கேள்விகளுக்குப் பின் வருகிறது).*

- பாலைவனப் பாதையில் போகுமாறு பிலிப்புவிடம் கூறியது யார்? *(வச. 26).*
- ரதத்தைத் தேடி போகுமாறு கூறிய ஆவியானவரின் கட்டளைக்கு பிலிப்பு எவ்வளவு சீக்கிரமாகக் கீழ்ப்படிந்தான்? *(30).*
- எத்தியோப்பியன் எதை வாசித்துக் கொண்டு இருந்தான்? *(வச. 30 பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கதரிசி எழுதியதைப் படித்துக் கொண்டிருந்தான் ஏசா. 5:3).*
- எதிர்காலத்தைப் பற்றிய இந்த தீர்க்கதரிசன வேத வசனம் யாரைப் பற்றி கூறியது? *(அப் 8:32 வெட்டுவதற்கு கொண்டு செல்லப்பட்ட ஆட்டைப் போல மரணமடைந்த இயேசுவைப் பற்றியது அது).*
- எவ்வளவு சீக்கிரத்தில் பிலிப்பு எத்தியோப்பியனுக்கு ஞானஸ்நானம் அளித்தான்? *(வச. 38).*

பிலிப்பும் எத்தியோப்பியனும் பற்றிய கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.**

- சபைத் தலைவரோடு பேசி ஆராதனையின் போது நாடகத்தை **அரங்கேற்ற ஏற்பாடு செய்க.** தை தயாரிக்க பிள்ளைகளோடு உங்கள் நேரத்தை ஒதுக்கவும்.

ï **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் கீழ்க்காணும் பாத்திரங்களில் நடிக்கலாம்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் பற்றி பேச வேண்டியதை ஞாபகப்படுத்துபவர்.

**பிலிப்பு**

**சிறு குழந்தைகள்** இந்த வேடங்களில் நடிக்கலாம்

**எத்தியோப்பியன்**

**குதிரைகள்** (ஒன்று அல்லது இரண்டு)

**குரல்** (ஆவியானவர் குரல்)

**கதை கூறுபவர்:** அப். 8:26-35 ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். "தேவதூதன் பிலிப்பிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**குரல்** : "பிலிப்புவே! வனாந்தர பாதையில் போ! இரதத்தைப் பார்க்கிறாயா! அதற்கு அருகில் செல்!"

**குதிரைகள்** : ரதமாக வைத்திருக்கும் இரண்டு நாற்காலிகள் முன் நின்று, குதிரை போல நடக்கவும்.



**எத்தியோப்பியன் :** (ஒரு நாற்காலியில் அமர்ந்து, ஏசாயா 53:7-8 ஐ வாசித்து, பின்) "என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆட்டுக்குட்டி என்பது யார்?"

**பிலிப்பு** : "நான் விளக்குகிறேன்" (அடுத்த நாற்காலியில் அமர்ந்து) "இந்த பண்டைய தீர்க்கத் தரிசனம் இயேசுவைப் பற்றியது. அவர் நமக்காக ஒரு ஆட்டுக் குட்டியைப் போல மரித்தார்."

**கதை கூறுபவர் :** அப். 8:36-40 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். "எத்தியோப்பியன் கூறுவதைக் கேளுங்கள்."

**எத்தியோப்பியன்:** "இதோ, இங்கே தண்ணீர் இருக்கிறது. நான் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள வேறு என்ன தடை?"

**பிலிப்பு** : "நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் முழுமனதோடு விசுவாசித்தால், ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளலாம்."

**எத்தியோப்பியன் :** "ஓ! குதிரைகளே! நில்லுங்கள்!"

**குதிரைகள்:** கனைப்பு. இரண்டு காலையும் குதிரை போல் உயர்த்தி, காற்றில் உதைத்தல்.

**பிலிப்பு** : எத்தியோப்பியனின் அருகில் நடந்து, ஞானஸ்நானம் கொடுப்பது போல் நடித்தல் பின் ஓடி மறைதல்.

**எத்தியோப்பியன் :** "எங்கே அந்த மனிதன்? அவர், எனக்கு ஞானஸ்நானம் கொடுத்து விட்டு மறைந்து போனாரே?"

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

- **குழந்தைகள்** இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.
- **ஒரு பெரிய பிள்ளை கேட்க வேண்டியது:** "இயேசுவைப் பற்றி மக்களிடம் பேசும்படி பரிசுத்த ஆவியானவர் காட்டும் வேறு வழிகள் எவை?"
- மக்கள் உதாரணங்களைத் தரட்டும்.

ஒரு வனாந்தர சாலையை **வரையவும்.**



- இந்த படத்தை பிள்ளைகள் பார்த்து வரைந்து பெற்றோர்களுக்கும் அடுத்த ஆராதனையின் போது பரியவர்களுக்கும் காட்டட்டும்.
- இரண்டு பேர் இருக்கும் ரதத்தை குதிரை இழுப்பது போல் ஒரு படம் வரையட்டும்.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்.

**மனனம் செய்க :** யோவான் 3:16.

**கவிதை:** ஏசாயா 53:6-8 வசனங்களை மூன்று பிள்ளைகள் ஒப்புவிக்கட்டும்.

பிலிப்பை பற்றி **ஒரு கவிதையோ அல்லது பாடலோ எழுத சில பெரிய பிள்ளைகள் விரும்பலாம்.**

**ஜெபம்:** "பிதாவே! எங்களை நடத்தும். உமது ஆவியைப் பின்பற்றித் தொடர விரும்புகிறோம். நற்செய்தியைக் கேட்க மனதுள்ளவர்களிடம் எங்களை நடத்தும். உமது குமாரனாகிய இயேசுவைப் பற்றி வேதாகமக் கதைகளை ஞாபகம் வைத்துக் கொள்ள உதவும். நீர் செய்த அதிசயமான காரியங்களை எல்லோரும் அறிய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net